திரு. த. சோனையா : குறிப்பாக கூட்ஸ் ரெயில் போகும்போது அதிக நேரம் அடைக்கப்படுகிறது. ஆகவே, மிக அவசியம் இது என்று அரசாங்கம் கருதுகிற காரணததாலே, மிக விரைவாக மேம்பாலம் அமைக்க ஏறபாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இரயில்வே வாரியத்தின் இசைவுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அது கிடைத்தவுடன் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

* 170 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரை இரயில்வே சந்திப்பு அருகில் இருப்புப் பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மானாமதுரைக்குச் செல்கிறபொழுது இரயில் பாதையைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அந்த ஊருக்குள்ளே ஒரு பஸ் போனால் இன்னொரு பஸ் வர முடியவில்லை. அது மிக நெருக்கடியாக இருக்கிற இடம். அதை உத்தேசித்தாவது அரசு ஊருக்கு வெளியே வருகிற 'பை பாஸ்' ரோட்டிலே மேம்பாலம் கட்டிக் கொடுத்தால் வசதியாக இருக்கும். ஆகவே, மேம்பாலம் கட்டிக் கொடுக்க இனியாவது அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மானாமதுரையைச் சுற்றித் தேசிய நெடுஞ்சாலையில் பை பாஸ் ரோடு ஒன்று போடப்பட்டு வருகிறது. அது முடிந்த பிறகு இது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

வறட்சி நிவாரணப் பணிகள்

* 171. வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி ஒன்றியத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட வேலைகள் என்னென்ன ?

(இ) இவற்றிற்கான மொத்தச் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தில் 1974–75, 1975–76 ஆண்டுகளில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன:

1. குடிதண்ணீர் விநியோக வேலைகள்;
2. சிறுபாசன வேலைகள்;
3. சாலை வேலைகள்.

(இ) இந்தப் பணிகளுக்கு ஆன மொத்தச் செலவுத் தொகை ரூ. 3,48,265.

* 172 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், வீரியபாளையம் பஞ்சாயத்துப் பகுதிகளில் வறட்சி நிவாரணப் பணி எதுவும் செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கு உரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) உண்மையில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Purchase of Coir fibre from Kerala.

* 173 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity bepleased to state—

(a) whether it is fact that the Kerala Government have assured this Government to lift the ban imposed by it on the movement of coir fibre to Tamil Nadu; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கேரள மாநிலத்திலிருந்து தேங்காய் மட்டைகள், தென்னை நார் ஆகியவை மாநிலத்துக்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படுவதையும் போக்குவரத்து செய்யப்படுவதையும் கட்டுப்படுத்தி, 1971 ஆம் ஆண்டு இந்தியப் பாதுகாப்பு விதிகளின்கீழ் "கேரளம் 1974 ஆம் ஆண்டு தேங்காய் மட்டைகள், தென்னை நார் (ஏற்றுமதிக் கட்டுப்பாடு) ஆணை"யையும், "கேரளம் 1975 ஆம் ஆண்டு தேங்காய்